**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.97/2023</u>**

2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய பெரோஸ்தீன் **PW.1** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 07.11.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பெரோஸ்தீன் | | |
| Father Name | : | ஜபுருதீன் | Court | : |
| Village | : | சங்கரன்பந்தல் | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 37 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

04.10.2019 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.04.2022 தேதியிட்ட 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.04.2022 தேதியிட்ட 3ம் பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகள் நிறுவனத்திற்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் O.S.120/2016ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சான்றிட்ட நகல் (இந்நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கு மாற்றம் செய்யப்பட்டு O.S.180/2019 என கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது) **வா.சா.ஆ.4** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த O.S.223/2019ன் வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த O.S.223/2019 (சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் O.S.97/2018ஆக தாக்கல் செய்யப்பட்டது)–ன் எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.05.2023தேதியிட்ட வாதி, 8ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் கொடுத்த மனுவின் நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)**வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.